# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 10.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 2450-E-2024**

திரு வை.சண்முகம் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை - 600 005

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு வை.சண்முகம் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை சேப்பாக்கம், நில நிர்வாகத் துறையின் உதவி ஆணையர் திரு கு.ச.ராம்குமார் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 12.03.2022 |
| **கோரிய தகவல்**:- கள்ளக்குறிச்சி மாவட்ட வருவாய் அலுவலரின் 13.08.2021 நாளிட்ட உத்தரவுக்கு எதிராக தான் 12.09.2021 அன்று சென்னை நில நிர்வாக ஆணையரகத்தின் உதவி ஆணையருக்கு அனுப்பிய மனுவின் நகலை சான்றோப்பமிட்டு வழங்க வேண்டும், அம்மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பன உட்பட 3 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |

| | |
|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்படவில்லை |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 03.05.2022 |
| சட்டப்பிரிவு 18(1)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 10.01.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை சேப்பாக்கம், நில நிர்வாக உதவி ஆணையருக்கு அனுப்பிய மனுவிற்கும், சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் அனுப்பிய முதலாம் மேல்முறையீட்டு மனுவிற்கும், தனக்கு பதில் ஏதும் வழங்கப்படவில்லையென தெரிவித்து, 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு 06.07.2026 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலையும், அதை மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கு தபால்துறையின் டிராக்கிங் அறிக்கையின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறது:-

i. **மனுதாரர் 12.03.2022 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனு தொடர்பாக மனுதாரருக்கு 06.07.2026 அன்று தான் பொதுத் தகவல் அலுவலரால் பதில் அனுப்பப்பட்டுள்ளது என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, கடந்த இரண்டரை ஆண்டுகளாக மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் / நில நிர்வாகத் துறை உதவி ஆணையர் யார் என்பதை மேல்முறையீட்டு அலுவலர் / நில நிர்வாகத் துறை கூடுதல் ஆணையர் <u>கண்டறிந்து</u> அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் 20(2) ஆகியவற்றின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று தற்போதைய நில நிர்வாகத் துறை <u>அலுவலக பொதுத் தகவல் அலுவலர்</u> மூலம் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

ii. **அதேபோல, மனுதாரர் 03.05.2022 நாளிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் அனுப்பிய முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் யார் என்பதை தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர் / நில நிர்வாகத் துறை கூடுதல் ஆணையர் <u>கண்டறிந்து</u> அவர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தை பெற்று 20.08.2026 அன்று தற்போதைய நில நிர்வாகத் துறை <u>அலுவலக பொதுத் தகவல்</u>**

**அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் வழக்கு எண் SA 2450-E-2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி ஆணையர் V
நில நிர்வாகத் துறை,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

கூடுதல் இயக்குநர்,
நில நிர்வாகத் துறை,
சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு வை.சண்முகம்,
த/பெ வையாபுரி படையாட்சி,
மண்மலை மற்றும் அஞ்சல்,
சின்னசேலம் வட்டம் - 606 247
கள்ளக்குறிச்சி மாவட்டம்

Copy to file
CR/PA